# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.77/2024 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மதனகோபால் | த–பெ | ராஜேந்திரன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 39/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கிளை மேலாளர், பஞ்சாப் நேஷனல் வங்கி காரைக்குடி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025**

---

**18.03.2025**

**முதல் விசாரணை**

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. வனிதா என்பவரின் வங்கி கணக்கு எண் 028400100254790 உடைய கணக்கில் காசோலை எண் 513876 தொடர்பான ஆவணங்களுடன் ஆஜர் ஆகி சாட்சியம் அளிக்கவேண்டி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி **01.01.2023 முதல் 16.03.2023 வரையிலான வாடிக்கையாளர் வனித்தாவின் வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 6 ஆகும். 07.12.2016 அன்று மேற்படி வனித்தாவின் வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் ம.சா.ஆ. 7 ஆகும்.** வழக்கு காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு திருப்பப்பட்டுள்ளது. ம.சா.ஆ. 1 காசோலை எங்கள் வங்கியிலிருந்து வழங்கப்பட்டது. வாடிக்கையாளர் வனித்தாவின் கையொப்பம் மாதிரி படிவம் கொண்டுவரவில்லை. வாடிக்கையாளரின் கணக்கு தொடங்கப்பட்டபோது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தில் உள்ள கையொப்பம், வாடிக்கையாளரின் மாதிரி கையொப்பமாக கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. **மேற்படி விண்ணப்படிவம் நகல் ம.சா.ஆ. 8 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

1) எதிரியின் KYC தான் மா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது. ம.சா.ஆ.1 காசோலையில் எதிரியின் கையொப்பம் தமிழில் உள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பமும் ம.சா.ஆ. 8 ஆவணத்தில் உள்ள கையொப்பமும் வித்தியாசபடும்போது போதிய பணம் இல்லை என்று மட்டும் ஏன் திருப்பப்பட்டது என்றால் ஒரு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்படும்போது அக்காசோலையை மதிப்புறு செய்வதற்கு கணக்கில் போதிய தொகை இருக்கிறதா என்று முதலில் சரிபார்க்கப்படும் அவ்வாறு போதிய தொகை இல்லை எனில் முதல் கட்டமாகவே திருப்பப்படும் அடுத்த கட்டமாக தேதி, கையொப்பம் ஆகியவை பார்க்கப்படமாட்டாது. போதிய தொகை இல்லை என்று காசோலை தவறாக திருப்பப்பட்டுள்ளது, கையொப்பம் மாறுபட்டுள்ளதாக சேர்த்து திருப்பப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்க இணங்க போதிய தொகை இல்லை என்று மட்டும் காசோலையை திருப்பியிருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

1) பொதுவாக ஒரு காசோலை வசூலுக்கு வரும்போது காசோலையில் உள்ள கையொப்பத்தோடு ஒப்பீடு செய்வோமா அல்லது வங்கி கணக்கு எண் தொடங்கப்பட்ட விண்ணப்படிவத்தில் உள்ள கையொப்பத்தோடு ஒப்பீடு செய்வோமா என்றால் பொதுவாக வங்கி கணக்கு எண் தொடங்கப்பட்ட விண்ணப்படிவத்தில் உள்ள கையொப்பத்தைத்தான் மாதிரி கையொப்பமாக கணிணியில் பதிவேற்றம் செய்து வைத்திருப்போம். ம.சா.ஆ. 8 ஆவணத்தில் பக்கம் 1, 2, 3, 4 ல் ஆகியவற்றில் உள்ள மாதிரி கையொப்பம் மாதிரி கையொப்பமாக கருதப்படும். மேற்படி வங்கி கணக்கிற்கு ம.சா.ஆ. 8 ல் உள்ள கையொப்பம்தான் மாதிரி கையொப்பம் ஆகும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி